# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அக்டோபர் மாத சாதாரணக்கூட்டம் 29.10.2020 ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்காரவேலர் காலனி பகுதியில், ஏ.வி.எம் கால்வாயின் குறுக்கே பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கட்டப்பட்ட சிறுபாலம் மோசமாக பழுதடைந்துள்ளதை தொடர்ந்து, பொது மக்கள் நலன் கருதி, நகராட்சி பொது நிதியின் கீழ், மேற்படி பாலத்தில் தற்காலிகமாக பழுதுகளை சரி செய்வதற்காக ரூ.2,80,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மன்றத் தீர்மானம் எண்.2309 நாள் 30.06.2020-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன் அடிப்படையில மேற்படி பணிக்கு, 26.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் அளித்த மதிப்பீட்டை விட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத் தீர்மானம் எண்.2348 நாள் 28.08.2020-ன் படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, கடந்த 04.09.2020 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணிக்கான மதிப்பீடு தயார் செய்வதற்காக இடம் ஆய்வு செய்யப்பட்ட போது, ஏ.வி.எம் கால்வாயில் தண்ணீர் நிரம்பி வழிந்தோடாமல் தேங்கி நின்றதால், பாலத்தின் அடிப்பகுதியின் தரத்தை கண்டறிய முடியாமல் போனது. அதன் பின்னர், பணியினை மேற்கொள்வதற்காக ஏ.வி.எம் காலிவாயின் புல், புதர்கள் மற்றும் பாசிகள் அகற்றப்பட்ட போது, தேங்கி நின்ற தண்ணீர் Vent மூலம் வழிந்தோடியதால், பாலத்தின் பக்க சுவற்றின் அடிமட்டம் உடைந்திருத்தது தெரிய வந்தது. எனவே மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத Earth work, RR Masoury, WMM போன்ற பணிகளை மேற்கொள்ள மறு மதிப்பீடு ரூ.3,25,000/-க்கு தயார் செய்யப்பட்டு, மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி மேற்கொள்ளப்பட்ட விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி திருத்திய மதிப்பீட்டிற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி செய்து முடித்ததற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.693-1/2008/இ1

**தீர்மானம் எண்.2375 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண்.TN 74 T 5508-க்கு வாகன விபத்து காப்பீடு பிரீமியம் 25.09.2020 உடன் முடிவடைவதால் அடுத்த ஓராண்டிற்கு (2020-2021) பிரீமியம் தொகை ரூ.18716/-பொது சுகாதார அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2913/2008/எச்1

**தீர்மானம் எண்.2376 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.3

இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண்.TN 75P 8399-க்கு வாகன விபத்து காப்பீடு பிரீமியம் 25.09.2020 உடன் முடிவடைவதால் அடுத்த ஓராண்டிற்கு (2020-2021) பிரீமியம் தொகை ரூ.18138/-பொது சுகாதார அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.14063/2014/எச்1

**தீர்மானம் எண்.2377 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.4

இந்நகராட்சி கணணி வசூல் மையத்தின் Plywood ஆல் அமைக்கப்பட்டுள்ள சுவர் பகுதி மிகவும் மோசமாக கரையானால் அரிக்கப்பட்டு, ஜன்னல், கதவு ஆகியவை செதில் பிடித்து உள்ளதுடன் Switch Board, மின் விளக்குகள் மற்றும் மின் விசிறிகள் பழுதடைந்து காணப்படுகிறது. மேலும் கணணி அறை மற்றும் வசூல் பிரிவும் ஒரே இடத்தில் செயல்பட்டு வருவதால், பாதுகாப்பற்ற நிலை உள்ளது. அத்துடன் Network cable, Server, Computer cable, Electric wires அனைத்தும் பழுதான நிலையில், ஆங்காங்கே Cable இழுக்கப்பட்டு, பழைய Model cable, Switch ஆகியவை இருப்பதால் Network வேகம் குறைந்துள்ளது. எனவே நிர்வாக நலன் கருதி, அலுவலகப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு, கணணி அறை மற்றும் வசூல் பிரிவை இரண்டு அறைகளாக பிரித்தல், அனைத்து பிரிவுகளுக்கும் தனித்தனியாக Network Cable அமைத்தல், Electrical Wiring முழுவதுமாக மாற்றி அமைத்தல், வசூல் மையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் கீழ் பகுதியில் குடிநீர் பிரிவுக்கான Store Room கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.7,20,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1018/2020/இ1

**தீர்மானம் எண்.2378 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்குட்பட்ட புனித மேரிமேல்நிலைப்பள்ளியில் 150 படுக்கைகள் கொண்ட கொரோனா சிகிச்சை மையம் ஆரம்பிப்பது தொடர்பாக சார் ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர்களால் நேராய்வு நடத்தப்பட்டதில், மேற்படி பள்ளியில் பந்தல் அமைப்பு, தண்ணீர் மற்றும் மின்வசதிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, தண்ணீர் வசதி செய்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள ரூ.1,00,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேலும் மின் வசதி (Tube and Focus light), Windows curtain spring அமைத்தல், பந்தல் அமைப்பு, மேஜை நாற்காலி இடம் மாற்றுதல், படுக்கை வசதிகள், Containment area Flex board அமைத்தல் ஆகிய பணிகளை தினசரி வாடகை அடிப்படையில் மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி கொரோனா நோய் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட விதி பிரிவு 15-ன் கீழ், தண்ணீர் வசதி செய்தல் தொடர்பான பணிகளை நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டு, அதற்கான பட்டியல் தொகை ரூ.96,258/-ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்தும், மின் வசதி (Tube and Focus light), Windows curtain spring அமைத்தல், பந்தல் அமைப்பு, மேஜை நாற்காலி இடம் மாற்றுதல், படுக்கை வசதிகள், Containment area Flex board அமைத்தல் ஆகிய பணிகளை 23.07.2020 முதல் 10.09.2020 வரை 50 நாட்களுக்கு தினசரி வாடகை அடிப்படையில் மேற்கொண்ட வகையில் பட்டியல் தொகை ரூ.84,761/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்தும் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.423-1/2020/இ1

**தீர்மானம் எண்.2379 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.6

இந்நகராட்சி பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் TN 74 V 3530-ல் டயர்கள் தேய்ந்துள்ளதால், பலமுறை பஞ்சர் ஒட்டி இயக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது டயர்கள் மிக மோசமாக தேய்ந்து, வாகனத்தை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. மேற்படி வாகனம் 231170 கி.மீ ஓடிய நிலையில், கடந்த 20.07.2015-ல் புதிதாக 5 டயர்கள் வாங்கி பொருத்தப்பட்டது. அதன் பின்னர் இதுநாள் வரை 80330 கி.மீ சேர்த்து மொத்தம் 311500 கி.மீ ஓட்டப்பட்டுள்ளதால், டயர்கள் மிக மோசமாக பழுதடைந்துள்ளது. மேற்படி ஈப்பு வாகனம் பொது சுகாதாரப்பணிகள், குடிநீர் வினியோகப்பணிகள், தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மற்றும் திட்டப்பணிகளை ஆய்வு செய்தல் ஆகிய பணிகளக்கு பயன்படுத்தப்பட்டு வருவதால், அவசர அவசியம் கருதி, மேற்படி வாகனத்தில் 5 எண்ணம் டயர்களை புதிதாக வாங்கி பொருத்தும் பணியினை மேற்கொள்வதற்கு, மதிப்பீடு ரூ.38,100/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளதற்கும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண்.2380 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.7

இந்நகராட்சி குடிநீர் லாரி TN 74 Z 5304-ல் பழுதடைந்த டேங்க் பகுதி முழுவதையும் மாற்றுதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக M/s.Mathava Motors, Vellamadam நிறுவனம் அளித்த ரூ.90,552/- (18% GST உட்பட) க்கான குறைந்த விலைப்புள்ளிக்கு மன்றத் தீர்மானம் எண்.2335 நாள் 28.08.2020-ன் படி மன்ற ஒப்புதல் பெற்று 04.09.2020 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி வாகனத்தில் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு, அதற்கான பட்டியல் தொகை ரூ.90,552/-ஐ வழங்குமாறு M/s.Mathava Motors, Vellamadam நிறுவனத்திலிருந்து பட்டியல் எண்.74 நாள் 12.10.2020 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5754/2010/இ1

**தீர்மானம் எண்.2381 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.8

இந்நகராட்சி குடிநீர் லாரி TN 74 Z 5304-ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக Online மூலம் புதுப்பித்தல் தொகை மற்றும் பசுமை வரி செலுத்தியது, Reflector Sticker ஒட்டியது, புகை பரிசோதனை, Chasis Print, வேக கட்டுப்பாட்டு கருவி புதியது மாட்டியது, Micro Auto tech sticker சான்று Online மூலம் வாங்கியது ஆகியவற்றிற்காக செலுத்தப்பட்ட தொகை ரூ.10,695/- ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5754/2010/இ1

**தீர்மானம் எண்.2382 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.9

இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான 2 எண்ணம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கு பணிக்கு அமர்த்துவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,25,000/-க்கு, பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.2290 நாள் 23.06.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு 03.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.செல்லநாடார், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.19% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.செல்லநாடார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதற்கும், ஆணையரின் அனுமதி பெற்று ஜூலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரை ஊதியம் வழங்கியதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.675/2020/இ1

**தீர்மானம் எண்.2383 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் 01.11.2020 முதல் 31.10.2021 வரையிலான ஒரு வருடத்திற்கு திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட அனைத்து பணிகளையும் மேற்கொள்வதற்கு தேவையான 45 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துதல் பணியினை ரூ.108.00 இலட்சம் (ஊதியம், EPF, ESI, பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட) மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2327 நாள் 31.07.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு கடந்த 30.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட 4 எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப உறை வருகை புரிந்த ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டதில், அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி பெற்றதை தொடர்ந்து, 05.10.2020 அன்று விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.OM Sai Ventures,<br>Porp.P.Anand Vardhan Reddy,<br>No.401/4, 14th Main Road,<br>Venkateswara Layout, Madiwala, Bengaluru | மதிப்பீட்டை விட 34.77% குறைவு (ரூ.22,455/-) |

| | | |
|---|---|---|
| 2 | M/s.Puliyoorsalai Labour Contract Co-operative society Ltd., No.Y-115, Mancode (P.o) | மதிப்பீட்டை விட 19.22% குறைவு (ரூ.27,810/-) |
| 3 | M/s.Southern Solid Waste Management Service No.12/182C, Appattuvilai, Koottamavu, Mulagumoodu (P.o) | மதிப்பீட்டை விட 15.69% குறைவு (ரூ.29,025/-) |
| 4 | M/s.Shawn Security Force, No.10-15 (1), Vijaya Nagari, ‘Chanthaiyadi (P.o) | மதிப்பீட்டை விட 6.41% குறைவு (ரூ.32,220/-) |

மேற்காணும் 4 ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.OM Sai Ventures, Bengaluru நிறுவனம் மதிப்பீட்டை விட 34.77 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்ததை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ளவாறு, ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டு தொகையில் 5%-க்கு மேல் குறைவாக இருப்பின் அதற்கு சமமான கூடுதல் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் கூடுதல் வைப்புத் தொகை ரூ.32,07,725/-ஐ செலுத்த கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் மேற்படி நிறுவனம் கூடுதல் வைப்புத் தொகையினை செலுத்த முன்வராத காரணத்தால், அதற்கு அடுத்ததாக மதிப்பீட்டை விட 19.22% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.Puliyoorsalai Labour Contract Co-operative society Ltd., No.Y-115, Mancode (P.o) நிறுவனத்திற்கு கூடுதல் வைப்புத் தொகை ரூ.15,32,209/-ஐ செலுத்த கேட்டு கடிதம் அனுப்பப்பட்டதில், கூடுதல் வைப்புத் தொகை ரூ.15,32,209/-க்கு கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மார்த்தாண்டம் கிளையில் எடுக்கப்பட்ட வங்கி உத்தரவாதம் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி Letter of Acceptance வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.809/2020/இ1

**தீர்மானம் எண்.2384 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.11

இந்நகராட்சியில், 2020-21 ஆம் ஆண்டு குடிநீர் வினியோகத்திற்கு தேவையான 33% குளோரின் அளவு கொண்ட பிளீச்சிங் பவுடர் வினியோகம் செய்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.1,75,000/-க்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2374 நாள் 30.09.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு 21.10.2020-ன் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Amritha Associates, 15-113, South Street, Thazhakudy | மதிப்பீட்டு விகிதம் (ரூ.1,73,400/-) |
| 2. | M/s.Stevewin Associates, 13/31A, Appattuvilai, Kootamaavu, Mulagumoodu (p.o) | மதிப்பீட்டை விட 3.92% அதிகம் (ரூ.1,80,200/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Amritha Associates, Thazhakudy நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர

அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.988/2020/இ1

**தீர்மானம் எண்.2385 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.12

இந்நகராட்சி அலுவலக வளாகம், பேருந்து நிலையம் மற்றும் அம்மா உணவகம் ஆகிய இடங்களில் 7 எண்ணம் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீடு ரூ.1,60,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2360 நாள் 30.09.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு 21.10.2020-ன் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Saha Computers,<br>71-1 Ist Floor,<br>Opp.Sub Collector's Office,<br>Thuckalay. | மதிப்பீட்டை விட 0.73% அதிகம்<br>(ரூ.1,38,315/-) |
| 2. | M/s.Rapid Refills,<br>No.98-A/1, Neela Building,<br>WCC Road, Nagercoil. | மதிப்பீட்டை விட 0.22% குறைவு<br>(ரூ.1,37,001/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Rapid Refills, Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.22% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1012/2020/இ1

**தீர்மானம் எண்.2386 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.13

இந்நகராட்சி உரக்கிடங்கு தேவைக்காக பாம்பூரி வாய்க்காலின் அருகில் வட்டு இறக்கி, சுற்றிலும் கருங்கல் கட்டு கட்டி, தண்ணீர் சேகரித்து, 1.50HP மின்மோட்டார் மூலம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் ஏற்றும் வகையில் குழாய் அமைத்தல் பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,10,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2361 நாள் 30.09.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 21.10.2020-ன் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.83% அதிகம்<br>(ரூ.89,067.50/-) |

| | | |
|---|---|---|
| 2. | திரு.சி.சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.35% குறைவு<br>(ரூ.88,029.10/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சுரேஷ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.35% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.925/2020/இ1

**தீர்மானம் எண்.2387 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.14

இந்நகராட்சி உப்பளம் பகுதி உரக்கிடங்கில், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான Conveyor Belt, Shredder Machine, Incinerator & Weighing Machine ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2362 நாள் 30.09.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 21.10.2020-ன் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.68% அதிகம்<br>(ரூ.6,02,600/-) |
| 2. | திரு.சி.சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு<br>(ரூ.5,92.600/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சுரேஷ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.925/2020/இ1

**தீர்மானம் எண்.2388 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.15

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் தற்போது பயன்பாட்டில் உள்ள Windrows Platform-ஐ MCC Machineries Shed ஆக மாற்றம் செய்வதற்கு தேவையான கட்டமைப்புகளை கட்டி, மின் வசதி செய்தல் மற்றும் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் : 2011-12 திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு, மேற்கூரை பழுதடைந்துள்ள Vermi Compost Shed-ல் மேற்கூரை மாற்றுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக தயார்

செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,80,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2363 நாள் 30.09.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 21.10.2020-ன் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு (ரூ.8,49,994.69/-) |
| 2. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.31% அதிகம் (ரூ.8,53,170.92/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.925/2020/இ1

**தீர்மானம் எண்.2389 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.16

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கட்டிடத்தின் மேல்பகுதியில் Record Room அமைக்கும் வகையில், Galvanished Iron Sheet கொண்டு சுவர் மற்றும் மேற்கூரை அமைத்தல் மற்றும் அறையின் உட்புறம் Racks அமைத்தல் ஆகிய பணிகனளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8,90,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2364 நாள் 30.09.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 21.10.2020-ன் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.21% அதிகம் (ரூ.7,78,025.43/-) |
| 2. | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு (ரூ.7,76,375/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1004/2020/இ1

**தீர்மானம் எண்.2390 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.17

இந்நகராட்சி கலவை உரக்கிடங்கில் தேங்கி உள்ள குப்பைகளை JCB மூலம் சமன் செய்திட தனி அலுவலர் தீர்மானம் எண்.2305, நாள் 23.06.2020-ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை (ரூ) (ஒரு மணி நேரத்திற்கு) |
|---|---|---|
| 1. | திரு.V.ஜோசப், குளச்சல் | 845/- |
| 2. | திரு.J.ஜோர்ஸசல், குளச்சல் | 875/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ஐ விட வரிசை எண்.1, திரு.V.ஜோசப், குளச்சல் என்பவரது ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.V.ஜோசப், குளச்சல் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.998/2017/எச்1

**தீர்மானம் எண்.2391 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.18

இந்நகராட்சிப்பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக Containment Zone (ம) பொது மக்கள், நகராட்சி பணியாளர்களிடம் பெறப்படும் கொரோனா தடுப்பு முகக்கவசம், கையுறை (ம) Bio-Medical waste-ஐ தனியாக சேகரித்து மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுரையுன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின் படியும், Aseptic Systems Bio-Medical waste Management company என்ற நிறுவனத்திடம் வழங்கவும் பிரதி மாதம் ரூ.12,000/- அதற்கான தொகையாக வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி அதற்கான செலவினங்களுக்கு மே 2020 முதல் ஏப்ரல் 2021 முடிய ஒரு வருடத்திற்கான உத்தேச செலவினமாக ரூ.1,44,000/- (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்)-க்கும், மே 2020 முதல் ஜுலை 2020 வரை 3 மாதங்களுக்கு பிரதி மாதம் ரூ.12,000/- வீதம் ரூ.36,000/-ஐ தனி அலுவலரின் 07.05.2020 ஆம் தேதி முன் அனுமதி பெற்று வழங்கியதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2392 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.19

இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண். TN 75 P 8424 (APE PORTER-600)-க்கு பழுதுகள் சரிசெய்து தகுதி சான்று பெறுவதற்கு உரிய மராமத்து பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர் தீர்மானம் எண்.2305, நாள் 23.06.2020-ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | அக்ஷயா மோட்டார் ஒர்க்ஸ், உண்ணாமலைக்கடை | 98176/- (GST உட்பட) |
| 2. | மாதவா மோட்டார் ஒர்க்ஸ், வெள்ளமடம் | 79945/- (GST உட்பட) |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ஐ விட வரிசை எண்.2, மாதவா மோட்டார் ஒர்க்ஸ், வெள்ளமடம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மாதவா மோட்டார் ஒர்க்ஸ், வெள்ளமடம் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1407/2014/எச்1

**தீர்மானம் எண்.2393 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.20

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி ஆய்வு கூட்ட நாள் 16.09.2020-ல், வடகிழக்கு பருவமழை காலத்தில் பொது மக்களுக்கு தண்ணீர் மூலம் நோய் தொற்று ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு, சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக, நகராட்சிகளில் குடிநீர் வினியோகத்திற்காக பயன்பாட்டிலுள்ள அனைத்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளையும் சுத்தம் செய்து, சுற்றிலும் வளர்ந்திருக்கும் செடி, கொடிகளை அப்புறப்படுத்தி, தொட்டிகள் முழுவதும் புதிதாக வர்ணம் பூசப்பட்டும், சுத்தம் செய்தல் தொடர்பான விவரங்களை எழுதி வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக பயன்பாட்டிலுள்ள 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில், கைப்பிடி சுவர் (Hand rails) மற்றும் படிகட்டுகள் உடைந்தும், வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்ளப்படாமலும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்ட பின்னர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமலும், சில மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் சுற்றுச்சுவர் கட்டப்படாமல் உள்ளதாலும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் உட்புறம் சேதமடைந்து குடிநீர் வீணாகுதல், தொட்டி அமைந்துள்ள இடங்களில் பொது மக்கள் அசுத்தம் செய்வதால் சுகாதார சீர்கேடு ஏற்படுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் பராமரிப்பு பணிகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக நான்கு கட்டங்களாக கீழ்காணும் விவரப்படி பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி - பேருந்து நிலையம், கொட்டில்பாடு, பர்ணட்டிவிளை, சுனாமி சிங்காரவேலன் காலனி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் பராமரிப்பு மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்ளுதல். | 2.00 |

| | | |
|---|---|---|
| 2. | குளச்சல் நகராட்சி - நகராட்சி அலுவலக வளாகம், பொட்டல் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் பராமரிப்பு மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்ளுதல். | 2.70 |
| 3. | குளச்சல் நகராட்சி - துறைமுகத்த தெருவில் புதிய, பழைய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் கே.எஸ்.எஸ்.எஸ் காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆகியவற்றில் பராமரிப்பு மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்ளுதல். | 3.25 |
| 4. | குளச்சல் நகராட்சி - மாதா காலனி பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் பராமரிப்பு, வர்ணம் பூசுதல் மற்றும் சுற்றுச்சூழல் கட்டுதல் பணிகள் மேற்கொள்ளுதல். | 3.60 |

எனவே மேற்காணும் பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கும், அவற்றிற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1192/2020/இ1

**தீர்மானம் எண்.2394 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.21

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.298 நாள் 02.09.2020-ல் கோவிட்-19 பொது ஊரடங்கு காரணமாக குளச்சல் நகராட்சி குத்தகைக்கு விடப்பட்டுள்ள கடைகள், பேருந்து நிலைய நுழைவு கட்டணம், தினசரி சந்தை, கட்டண கழிப்பிடங்கள், திரை விளம்பரம் ஆகிய குத்தகை இனங்களுக்கு வாடகை தொகை செலுத்துவதிலிருந்து தள்ளுபடி செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.298 நாள் 02.09.2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2395 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.22

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.298, நாள் 02.09.2020-ன் படி இயற்கை பேரிடர் நிவாரண கொரோனா நோய் தடுப்பு பணிகள் (COVID-19) பொது ஊரடங்கு காலமான 01.04.2020 முதல் 31.05.2020 வரையுள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் பிற இனங்களான கடைகளின் வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.8763/2020/அ2 நாள் 29.09.2020-ன் படி, மேற்படி இரண்டு மாதங்களுக்கு வாடகை தொகை கேட்பினை தள்ளுபடி செய்வதற்கு அலுவலக குழு அமைக்கப்பட்டு,

மேற்படி குழு கீழ்கண்டவாறு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே கீழ்காணும் பட்டியலில் உள்ள கடைகள் மற்றும் ஆண்டு குத்தகைகளுக்கு 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான இரண்டு மாதங்களுக்கு வாடகை தொகை கேட்பினை தள்ளுபடி செய்யவும், மேற்படி இரண்டு மாதங்களுக்கான கேட்பினை கணணியிலிருந்து நீக்கம் செய்திடவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஆண்டு குத்தகை (ரூபாயில்) | ஒரு மாத குத்தகை | 01.04.2020 முதல் 31.05.2020 முடிய குத்தகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | தினசரி சந்தை | பி.கென்னடி<br>4–23எ, கண்டர்விளாகம்,<br>வாணியக்குடி அஞ்சல் | 669108 | 55759 | 111518 |
| 2 | 2 | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | பி.கென்னடி<br>4–23எ, கண்டர்விளாகம்,<br>வாணியக்குடி அஞ்சல் | 89258 | 7438 | 14876 |
| 3 | 3 | காமராஜர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | பி.கென்னடி<br>4–23எ, கண்டர்விளாகம்,<br>வாணியக்குடி அஞ்சல் | 63000 | 5250 | 10500 |
| 4 | 4 | அண்ணாசிலை சமீபம் கட்டண கழிப்பிடம் | ஐயப்பன்<br>3–85எ, சன்னதி தெரு,<br>குளச்சல். | 10408 | 867 | 1734 |
| 5 | 5 | காமராஜர் பேருந்து நிலைய திரை விளம்பரம் | ஆர்.ரமேஷ்<br>3–83இ, கோவில் விளை,<br>இரும்பிலி. | 102597 | 8550 | 17100 |
| | | | **மொத்தம்** | **265263** | **77864** | **155728** |

மூன்றாண்டு குத்தகை இனங்கள்

காமராஜர் பேருந்து நிலைய கடைகள்

| வ.எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி | ஆண்டு குத்தகை (ரூபாயில்) | ஒரு மாத குத்தகை | 01.04.2020 முதல் 31.05.2020 முடிய குத்தகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 148/2018001 | கடை | ஜெகதீஷ் | 160008 | 13334 | 26668 |
| 2 | 148/2018003 | கடை | .அகமது கபீர் | 212400 | 17700 | 35400 |
| 3 | 148/2018004 | கடை | ராமகிருஷ்ணன் | 141600 | 11800 | 23600 |
| 4 | 148/2018005 | கடை | மரிய ஜெரோம் | 127440 | 10620 | 21240 |
| 5 | 148/2018006 | கடை | கென்னடி | 72216 | 6018 | 12036 |
| 6 | 148/20050300 | கடை | காதி கிராப்ட் | 43116 | 3593 | 7186 |
| 7 | 148/2018008 | கடை | முகம்மது மிக்தாத் | 72216 | 6018 | 12036 |
| 9 | 148/2018010 | கடை | ராபி சுந்தர் சிங் | 56640 | 4720 | 9440 |
| 10 | 148/2018011 | கடை | ஐரின் விஜயகுமார் | 56640 | 4720 | 9440 |
| 11 | 148/2018012 | கடை | ஐரின் விஜயகுமார் | 56640 | 4720 | 9440 |
| 12 | 148/2018013 | கடை | ஜெகன் | 56640 | 4720 | 9440 |
| 13 | 148/2018014 | கடை | ஹெலன் | 56640 | 4720 | 9440 |
| 14 | 148/2018015 | கடை | பட்ட முத்து | 56640 | 4720 | 9440 |
| 15 | 148/2018016 | கடை | ரெஜினி குமார் | 42480 | 3540 | 7080 |
| 16 | 148/2018019 | கடை | பிரவின் | 35400 | 2950 | 5900 |
| 17 | 148/2018020 | கடை | கிறிஸ்டல் மோகன் | 35400 | 2950 | 5900 |
| 18 | 148/2018021 | கடை | கிறிஸ்டல் மோகன் | 35400 | 2950 | 5900 |
| 19 | 148/2018028 | கடை | ராதாகிருஷ்ணன் | 42480 | 3540 | 7080 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20 | 148/2018029 | கடை | ஜாண்சன் | 56640 | 4720 | 9440 |
| 21 | 148/2018030 | கடை | சுஜாதா ராமகிருஷ்ணன் | 58056 | 4838 | 9676 |
| 22 | 148/2018031 | கடை | ஜெய சோபனபாய் | 63720 | 5310 | 10620 |
| 23 | 148/2018032 | கடை | முகம்மது பாரூக் | 56640 | 4720 | 9440 |
| 24 | 148/2018033 | கடை | முகம்மது பாரூக் | 56640 | 4720 | 9440 |
| 25 | 148/2018034 | கடை | அரவிந்த் பிரசாத் | 56640 | 4720 | 9440 |
| 26 | 148/2018035 | கடை | முகம்மது முசம்மில் | 176004 | 14667 | 29334 |
| கருணாநிதி வணிக வளாகம் | | | | | | |
| 28 | 148/2018040 | கடை | நிர்மலா | 84960 | 7080 | 14160 |
| 29 | 148/2018041 | கடை | நிர்மலா | 84960 | 7080 | 14160 |
| 30 | 148/2018042 | கடை | சகாய டெல்பின் | 70800 | 5900 | 11800 |
| 31 | 148/2018043 | கடை | சபீக் அகம்மது | 70800 | 5900 | 11800 |
| 32 | 148/2018044 | கடை | நபிஷா பீவி | 70800 | 5900 | 11800 |
| 33 | 148/2018045 | கடை | முகம்மது உபைஸ் | 70800 | 5900 | 11800 |
| 34 | 148/2018046 | கடை | பைசல் | 70800 | 5900 | 11800 |
| 35 | 148/2018047 | கடை | பால்தாஸ் | 56640 | 4720 | 9440 |
| 36 | 148/2018048 | கடை | பால்தாஸ் | 56640 | 4720 | 9440 |
| 37 | 148/2018049 | கடை | அஜிதா | 49560 | 4130 | 8260 |
| 38 | 148/2018050 | கடை | அஜிதா | 49560 | 4130 | 8260 |
| 40 | 148/2011004 | கடை | மார்சல் பெலிக்ஸ் | 70800 | 5900 | 11800 |
| 41 | 148/2018054 | கடை | அன்சார் | 56640 | 4720 | 9440 |
| 42 | 148/2014001 | கடை | ஷாகுல் அமீது | 56640 | 4720 | 9440 |
| 43 | 148/2018056 | கடை | சுல்பீகர் மாஹீன் | 56640 | 4720 | 9440 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 44 | 148/2018057 | கடை | மாஹீன் அபுபக்கர் | 56640 | 4720 | 9440 |
| 45 | 148/2018058 | கடை | மாஹீன் அபுபக்கர் | 56640 | 4720 | 9440 |
| 46 | 148/2018059 | கடை | ஆசிர் மனோஜ் ஜாண் | 56640 | 4720 | 9440 |
| 47 | 148/2011001 | கடை | தாகீர் உசேன் | 50976 | 4248 | 8496 |
| 48 | 148/2011006 | கடை | மோகன்லால் பாபு | 49560 | 4130 | 8260 |
| 49 | 148/2018063 | கடை | சுந்தர் | 49560 | 4130 | 8260 |
| 50 | 148/2018064 | கடை | சுந்தர் | 49560 | 4130 | 8260 |
| 51 | 148/2012001 | கடை | அப்துல் ரகீம் | 50976 | 4248 | 8496 |
| 52 | 148/BD01/00006 | கடை | ஜாண் | 50976 | 4248 | 8496 |
| 53 | 148/BD01/00003 | கடை | எம்.சித்திக் | 50976 | 4248 | 8496 |
| 54 | 148/BD01/00004 | கடை | அப்துல் அசீஸ் | 50976 | 4248 | 8496 |
| 55 | 148/BD01/00005 | கடை | அப்துல் அசீஸ் | 50976 | 4248 | 8496 |
| 56 | 148/2018070 | கடை | சித்திக் | 84960 | 7080 | 14160 |
| 57 | 148/2018071 | கடை | அமலதாஸ் | 84960 | 7080 | 14160 |
| 59 | 148/2008001 | கடை | ராய் மேத்யூ | 25260 | 2105 | 4210 |
| 60 | 148/2008002 | கடை | ராய் மேத்யூ | 25116 | 2093 | 4186 |
| 61 | 148/2008003 | கடை | ராய் மேத்யூ | 25260 | 2105 | 4210 |
| 62 | 148/2008004 | கடை | ராய் மேத்யூ | 25260 | 2105 | 4210 |
| 63 | 148/2008005 | கடை | ராய் மேத்யூ | 25116 | 2093 | 4186 |
| 64 | 148/2008006 | கடை | ராய் மேத்யூ | 25260 | 2105 | 4210 |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள்** | | | | | | |
| 65 | 148/2018104 | கடை | பொன்னுமணி | 42480 | 3540 | 7080 |
| 66 | 148/2018105 | கடை | பொன்னுமணி | 42480 | 3540 | 7080 |
| 67 | 148/2018106 | கடை | உசேன் கான் | 42480 | 3540 | 7080 |
| 68 | 148/2018107 | கடை | ஷாகுல் ஹமீது | 42480 | 3540 | 7080 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 69 | 148/2018108 | கடை | அயூப் கான் | 49560 | 4130 | 8260 |
| 70 | 148/2018109 | கடை | அயூப் கான் | 49560 | 4130 | 8260 |
| 71 | 148/2018110 | கடை | முகம்மது சலாவுதீன் | 49560 | 4130 | 8260 |
| 72 | 148/2018111 | கடை | முகம்மது சுலைமான் | 56640 | 4720 | 9440 |
| 73 | 148/2018112 | கடை | முகம்மது சலாவுதீன் | 56640 | 4720 | 9440 |
| 74 | 148/2018113 | கடை | சேகர் | 70800 | 5900 | 11800 |
| 75 | 148/2018114 | கடை | சேகர் | 70800 | 5900 | 11800 |
| 76 | 148/BD01/00002 | கடை | முகம்மது முசேர் | 77880 | 6490 | 12980 |
| 77 | 148/2018116 | கடை | ஜாண்சன் | 72924 | 6077 | 12154 |
| 78 | 148/2018117 | கடை | ஆல்பிரட் | 84960 | 7080 | 14160 |
| 79 | 148/2018118 | கடை | ஜாண் நிக்சன் | 84960 | 7080 | 14160 |
| 80 | 148/2018119 | கடை | ஜாண் நிக்சன் | 84960 | 7080 | 14160 |
| 81 | 148/2016001 | கடை | கிங்ஸ்லி மில்டன் ராஜ் | 16284 | 1357 | 2714 |
| 82 | 148/2012007 | கடை | கிங்ஸ்லி மில்டன் ராஜ் | 18732 | 1561 | 3122 |
| 83 | 148/BD01/00007 | கடை | கிங்ஸ்லி மில்டன் ராஜ் | 16284 | 1357 | 2714 |
| 84 | 148/2013002 | கடை | எல்.ஐ.சி | 18732 | 1561 | 3122 |
| 85 | 148/2013003 | கடை | எல்.ஐ.சி | 18732 | 1561 | 3122 |
| 86 | 148/2016002 | கடை | ஷீபா | 16284 | 1357 | 2714 |
| **நவீன மீன் சந்தை** | | | | | | |
| 87 | 148/2017003 | கடை | ஜெசி ஜெனட் | 80712 | 6726 | 13452 |
| 88 | 148/2017004 | கடை | மோகன்லால் பாபு | 77880 | 6490 | 12980 |
| 89 | 148/2017006 | கடை | ஜெமிலா | 215940 | 17995 | 35990 |
| 90 | 148/2018145 | கடை | பனிப்பிச்சை | 151512 | 12626 | 25252 |
| 91 | 148/2017008 | கடை | சசி | 158592 | 13216 | 26432 |
| 92 | 148/2017009 | கடை | கிரிஜா | 94872 | 7906 | 15812 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 93 | 148/2017010 | கடை | ஜெயசீலன் | 94872 | 7906 | 15812 |
| 94 | 148/2017012 | கடை | நாகராஜன் | 94872 | 7906 | 15812 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **டாக்டர் அம்பேத்கார் தற்காலிக கடைகள்** | | | | | | |
| 95 | 148/2018159 | கடை | மனோகரன் | 99120 | 8260 | 16520 |
| 96 | 148/2018160 | கடை | மனோகரன் | 99120 | 8260 | 16520 |
| 97 | 148/2018161 | கடை | ஜெகதீஷ் | 99120 | 8260 | 16520 |
| 98 | 148/2018162 | கடை | ராஜேஷ் | 99120 | 8260 | 16520 |
| 99 | 148/2018163 | கடை | ஜாண்சன் | 99120 | 8260 | 16520 |
| 100 | 148/2018164 | கடை | விஜிகுமார் | 99120 | 8260 | 16520 |
| 101 | 148/2018165 | கடை | ராஜகுமார் | 84960 | 7080 | 14160 |
| 102 | 148/2018166 | கடை | ஜனேசி | 84960 | 7080 | 14160 |
| 103 | 148/2018167 | கடை | அகமது கபீர் | 84960 | 7080 | 14160 |
| 104 | 148/2018168 | கடை | ஐசக் அந்தோணி பிச்சை | 84960 | 7080 | 14160 |
| 105 | 148/2018169 | கடை | செல்வராஜ் | 84960 | 7080 | 14160 |
| 106 | 148/2018170 | கடை | பிரபா | 84960 | 7080 | 14160 |
| 107 | 148/2018171 | கடை | ஜெயந்தி | 70800 | 5900 | 11800 |
| 108 | 148/2018172 | கடை | பால்தாஸ் | 70800 | 5900 | 11800 |
| 109 | 148/2018173 | கடை | சங்கர் | 70800 | 5900 | 11800 |
| 110 | 148/2018174 | கடை | ஹம்சி முகம்மது | 70800 | 5900 | 11800 |
| 111 | 148/2018175 | கடை | தங்க நாடார் | 70800 | 5900 | 11800 |
| 112 | 148/2018176 | கடை | குமாரதாஸ் | 70800 | 5900 | 11800 |
| **சொர்ண ஜெயந்தி** | | | | | | |

| கடைகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 113 | 148/2018152 | கடை | மணிவண்ணன் | 21240 | 1770 | 3540 |
| 114 | 148/2018153 | கடை | காஜா முகைதீன் | 28320 | 2360 | 4720 |
| 115 | 148/2018154 | கடை | தாகிரா பீவி | 28320 | 2360 | 4720 |
| 116 | 148/2018155 | கடை | அப்துல் கரீம் | 28320 | 2360 | 4720 |
| 117 | 148/BD01/00001 | கடை | ஜெசி ஜெனட் | 99120 | 8260 | 16520 |
| 119 | 148/2007063 | கடை | ஆவின் பால் | 5952 | 496 | 992 |
| | | | மொத்தம் | **7601040** | **633420** | **1266840** |

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2396 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.23

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளையும் திறந்தவெளி கழிப்பிடமில்லாத பகுதியாக (ODF+) அறிவிப்பதற்கு மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்த நிபந்தனைகளின்படி, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், சுய உதவிக்குழுக்கள், ஆணையாளர் குடியிருப்பு நல சங்கம், வர்த்தக சங்கம் உள்ளிட்டோரிடமிருந்து உரிய படிவத்தில் உறுதி மொழி பெறப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சக்குட்பட்ட பகுதியை திறந்தவெளி கழிப்பிடமற்ற பகுதியாக (ODF+) அறிவிப்பதற்காக, இந்நகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் இப்பொருள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் உரிய ஆதாரங்களுடன் அலுவலக வேலை நாட்களில் நேரிலோ அல்லது commr.colachel@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இந்த அறிவிப்பு செய்த 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக பதிவு செய்யலாம் என்பதை தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் விளம்பரம் செய்திட ஆகும் செலவினத் தொகைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.360/2020/எச்1

**தீர்மானம் எண்.2397 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.24

குளச்சல் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக குளச்சல் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் SECONDARY STORAGE AND TRANSPORATION செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது

எனவே குளச்சல் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (THREE STAR RATING) பெற பள்ளிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், சுய உதவிக்குழுக்கள், குடியிருப்பு நலச்சங்கம், குப்பைகளை அதிகமாக உற்பத்தி செய்பவர்கள், வர்த்தக சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளிடமிருந்து சுய உறுதி மொழி (Self Declaration) பெறப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சிக்கு உட்பட்ட பொது மக்கள் இப்பொருள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் உரிய ஆதாரங்களுடன் அலுவலக வேலை நாட்களில் நேரிலோ அல்லது commr.colachel@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இந்த அறிவிப்பு செய்த 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக பதிவு செய்யலம் என்பதை தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் விளம்பரம் செய்திட ஆகும் செலவினத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

. ந.க.எண்.360/2020/எச்1

**தீர்மானம் எண்.2398 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.25

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்வதற்காக R.R.எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உரிமம் 30.09.2020-ல் முடிவடைந்துவிட்டது. எனவே அடுத்து வரும் ஓராண்டிற்கு மேற்படி இனத்திற்கான குத்தகை உரிமத்திற்கு 28.09.2020, 14.10.2020, 29.10.2020 ஆகிய தேதிகளில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. தற்போது கொரோனா நோய் பரவல் நிலையினை கருத்தில் கொண்டும், நகராட்சி நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும் R.R.எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு மேற்படி உரிமத்தை ரூ.42400/- மற்றும் 7632(GST 18%) சேர்த்து மொத்தம் ரூ.50032/-க்கு அடுத்து வரும் ஓராண்டிற்கு (டிசம்பர் 2020 முதல் நவம்பர் 2021 வரை) வழங்க மன்றம் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.236/2017/அ1

**தீர்மானம் எண்.2399அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.26

இந்நகராட்சியில் பயன்பாட்டிலுள்ள 5 KVA மற்றும் 3 KVA UPS களின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) முறையே 02.11.2020 மற்றும் 05.11.2020-ல் முடிவடைவதால், மேலும் ஓராண்டுக்கு ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்காக, மேற்படி UPS களின் விநியோகஸ்தரரான Novateur Electrical & Digital Systems Pvt ltd., நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, அலுவலக பணிகளில் மேற்படி UPS-களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, AMC காலத்தை தொடர்ந்து ஓராண்டுக்கு முறையே 03.11.2020 முதல் 02.11.2021 மற்றும் 06.11.2020 முதல் 05.11.2021 வரையும் கீழ்காணும் கட்டணத்தின் படி நீட்டிப்பு செய்வதற்கும், வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தை Novateur Electrical & Digital Systems Pvt ltd., வழங்குவதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. 5 KVA UPS 03.11.2020 – 02.11.2021 ரூ.8850
2. 3 KVA UPS 06.11.2020 – 05.11.2021 ரூ.6490

**மொத்தம் - ரூ.15340**

ந.க.எண்.3562/A2/2007

**தீர்மானம் எண்.2400அனுமதிக்கப்படுகிறது.**